புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# காடு நாவலில் குறிஞ்சி

ஆ. அனிஷா
பதிவு எண்: 22113114022011
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி மார்த்தண்டம் -629165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி - 627012

முனைவர் ஆ. பிரைனி,
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம் – 629165 மனோன்மணியம்
சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி 627012

==========================================================================

ஆய்வுச் சுருக்கம்:

சமூகவாழ்க்கைத் தளத்தை நிலைநாட்டிப் பயன்கொள்வதற்காக மனிதன் தனக்குத்தானே சிலவாழ்வியல் நெறிமுறைகள் மற்றும் பண்பாட்டுப் பின்புலங்களோடு இயைந்த நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தங்கள் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து உருவாக்கி அவற்றை வாழ்வியலோடு இணைத்து உறவாடச் செய்து கொண்டான். குறிஞ்சி நிலம் ஏனைய நிலங்களுக்குத் தாயகம். குறிஞ்சியான மலையகம் காற்றைத் தடுத்தும் குறிப்பிட்ட எல்லை கடந்து வண்டலைப் படியச் செய்கிறது. இதனால் நன்றாக மண்டித் தழைக்கும் காடு தோன்ற வழி ஏற்படுகிறது. மலைப் பகுதியின் ஒரு பால் வீசும் காற்று, ஒரு கால் ஈரத்தன்மை இழந்தும், உலர்ந்தும் ஆவியாகிய நிலையில் பாலைத் தன்மைக்கு வித்திடுகின்றது. காற்று மோதாத பக்கங்களிலும் பாலை விரிய ஏதுவாகிறது. முல்லை நிலம் திரிந்த பாலையினும் குறிஞ்சி திரிந்த பாலையே சங்க இலக்கியத்தில் மிகவும் பயின்று வருவதைக் காணமுடிகிறது. குறிஞ்சியின் பகுதி விரிந்து காடுகளை உண்டு பண்ணுதல் இயல்பு. குறிஞ்சியின் சாயல் பெற்ற முல்லைக் காடுகளைச் சங்க நூல்கள் குறித்துள்ளன. காடுகளையும் பண்டைத் தமிழர் குறிஞ்சி நிலமாகவே கருதினர் என்னும் கூற்று இதற்கு அரண் செய்வதாகும்.

நிலத்தை ஒட்டியதாக அமைந்த நம் பழந்தமிழர் வாழ்க்கை முறையின் அடிப்படையில் நிலம் ஐவகையாகப் பிரித்துணரப்பட்டுள்ளன என்பதை தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய இயலுகின்றது. அவற்றினுள் முறையே குறிஞ்சி, முல்லை மருதம். நெய்தல் என்ற நான்குப் பாகுபாட்டினை மட்டும் காட்டி இவற்றின் திரியே பாலை என்றும் பேசப்படுகின்றது. அத்தகைய ஐவகை நிலத்தில் ஒன்றானதே குறிஞ்சி ஆகும். இக்கட்டுரையின் தலைப்பு ‘காடுநாவலில் குறிஞ்சி’ என்பதாகும்.

## முன்னுரை:

ஒவ்வொரு நிலப்பாகுபாட்டிற்கேற்ப முதற்பொருள். உரிப்பொருள், கருப்பொருள் என்ற நிலையில் நிலத்தின் தன்மை, வாழும் மக்கள், விலங்குகள். தொழில்கள், இயற்கைமாற்றம் இவைகளைச் சார்ந்த ஒழுக்கம் பழந்தமிழரிடையே காணப்பட்டது. குறிஞ்சிக்குரிய நிலம் மலையும் மலை சார்ந்த இடமுமாகும். மலையில் உள்ள குறிஞ்சி பூவினால் குறிஞ்சி நிலம் எனப் பெயர் பெற்றது. ஜெயமொகன் எழுதிய காடு நாவலில் குறிஞ்சி நிலம் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

*குறிஞ்சித் திணை:*

*குறிஞ்சி நிலம் மலைவளம் மிக்கது தலைவன் கானவர். வேட்டுவர் எனவும் தலைவி கொடிச்சி என்றும் அழைக்கபடுகின்றனர். திணைநில மக்கள் குறவன், குறத்தி, வேட்டுவர், வேட்டுவச்சி என்றும் அழைக்கப்படுகின்றனர். புலி, கடி யானை முதலிய விலங்குகள் இத்திணையில் காணப்படுகின்றன. இவர்களுடைய ஊர் சிறுகுடி என்றழைக்கப்படுகின்றது.*

*வாழ்க்கை முறைகள்:*

*குறிஞ்சி நிலமக்கள் முருகனை வழிபடுகின்றனர். இவர்கள் மலையில் கிடைக்கும் பொருட்களையே உணவாக உண்கின்றனர். இவர்கள் வேட்டையாடும் தொழிலில் மிகவும் சிறந்து விளங்கினர். இவர்களுடைய வாழ்க்கை முறை நாடோடியாகவே அமைந்தது.*

*மலையிடுக்குகளின் இடுக்குகளில் களவொழுக்கம் நிகழ்கிறது. "குறிஞ்சி என்பது பூவால் பெற்ற பெயர் அன்று. ஒழுக்கத்தால் பெற்றபெயர் ஆகும்.*

*குறிஞ்சி – சொல்லாட்சி*

*தமிழில் முழுமையாகக் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் குறிஞ்சி என்ற சொல் மூன்று இடங்களில் வந்துள்ளன.*

*முல்லை குறிஞ்சி மருதம் எனச் சொல்லிய*
*முறையால் சொல்லவும் படுமே (தொல். பொருள்.5)*
*குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர் (தொல். பொருள்.6)*
*வெட்சி தானே குறிஞ்சியது புறனே (தொல். பொருள்.56)*

*சங்க கால மக்களின் வாழ்வியல் நிலைகளை ஓவியம் போல எடுத்துரைக்கும் சங்க இலக்கியத்தில் குறிஞ்சி என்ற சொல் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன.*

*குறிஞ்சி நல்லூர் பெண்டிர்*
*இன்னும் ஓவார் என்திறத்து அலரே (நற். 116:11-12)*
*கருங்கோல் குறிஞ்சி அடுக்கம் பாட*
*புலிப்பல்தாலி புன்தலைச் சிறாஅர் (புறம். 374:8-9)*
*நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி (முருகு. 239)*
*விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ (முருகு. 267)*
*குறிஞ்சி பரதவர் பாட (பொருந. 218)*
*குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்*
*செல்லிசை நிலைஇய பண்பின்*
*நல்லியக் கோடனின் நயந்தனிர் செலினே (சிறுபாண். 267-269)*
*வில்யாழ் இசைக்கும் விரல் எறி குறிஞ்சிப்*
*பல்கால் பறவை கிளைசெத்து ஓர்க்கும்*
*புல்ஆர் வியன்புலம் போகி (பெரும்பாண். 182-184)*
*கருங்கால் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து (மதுரைக். 300)*
*கார்மலர்க் குறிஞ்சி சூடி (மதுரைக். 613)*
*தண்கயக்குவளை குறிஞ்சி வெட்சி (குறிஞ்சி. 63)*
*மறையோர் மணம் எட்டின் ஐந்தாம் மணத்தின்*
*குறையாக் குறிஞ்சிக் குணம் (குறிஞ்சி. வெண்பா)*
*வள்இதழ் குளவியும் குறிஞ்சியும் குழைய (மலைபடு. 334)*
*நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடி (மலைபடு. 359)*

*குறிஞ்சி - சொல்லாட்சியின் வரலாறு*

*திணைப்பெயர் ஒவ்வொன்றும் பெயர்க் காரணத்தைக் கருதி வந்தது. குறுகுதல் குறிஞ்சி எனவும், மருவுதல் மருதம் எனவும், முல்லுதல் முல்லை எனவும், பற்றுதல் பாலை எனவும், நெய்வது நெய்தல் எனவும் செந்தமிழ் அகராதி கூறுகிறது.*

*குறிஞ்சி என்பது குறி என்பதன் அடிப்படையாக வந்தது. குறி அடையாளம், காலம், அளவு, என்று பொருள்படும் எனவும், பல்லாண்டுக் கால அளவைக் குறிக்கும் பூ. அப்பூப் பூக்கும் செடி, அச்செடி இயற்கையாக வளரும் மலை, மலை சார்ந்த இடமும் எனவும் விளக்கியுரைக்கிறார் தேவநேயப் பாவாணர்.*

*தழுவுதல் தழிஞ்சி எனவும், நெரிப்பது நெருஞ்சி எனவும், ஆவது போலக் குறுகுதல் குறிஞ்சியாகவும், இறுகுதல் என்பது நெருங்குதல், அணைதல், சேர்தல், இணைதல், புணர்தல் எனப் பொருள் கூறலாம் என்கிறது செந்தமிழ் அகராதி. குறுகுதல் என்னும் அடிப்படையில்*

*இச்சொல் தோன்றியதன் வரலாற்றினையும், விளக்குவர். குறிஞ்சி என்னும் சொல் குறு+இஞ்சி என்று பாகுபடும். குறு என்பது குறுகல் எனப்படும். பரவலாக பொருள் அந்நிலையினின்றும் சுருங்குதலைக் குறுகுதல் என்பர். இஞ்சி என்பது இடம், மலை என்றும் பொருள்படும். நானிலத்தில் குறுகுதலான நிலம் எதுவெனில் மலையும் மலை சார்ந்த நிலமுமாம் என்று காரணம் கண்டுரைப்பவர் சிவபாத சுந்தரனார்.*

*'குறிஞ்சி நிலமே மக்கள் ஆதியில் வாழ்ந்த இடம்' என்கிறார் வேலுப்பிள்ளை. மேலும் அவர் "குறிஞ்சி நில மக்கள் குறவர் ஆவர். அவர் வாழ்ந்த இடங்களில் யானையும், புலியும், கரடியும் திரிந்தன. தினையே குறிஞ்சி நிலத்தில் விளைந்த முக்கிய தானியமாகும். இந்நில ஆடவர் வேட்டைக்குச் சென்றபோது பெண்கள் உயர்ந்த பரண்களில் ஏறியிருந்து காட்டு மிருகங்களிடமிருந்து தினைப்புனத்தைக் காத்தனர் இறைச்சி, கள் என்பன இவரின் உணவு வகைகள். இவர் குடியிருப்பு சிறுகுடி" என்கிறார் வேலுப்பிள்ளை.*

*குறிஞ்சித்திணை:*

*நிலம்:*

*மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும்.*

*பொழுதுகள்:*

*பொழுது இரு வகைப்படும்.*

1. *பெரும்பொழுது*
2. *சிறுபொழுது*

*பெரும்பொழுது – குளிர்காலம், முன்பனி*

*ஒரு ஆண்டை ஆறாகப் பிரிப்பது பெரும்பொழுது ஆகும்.*

*சிறுபொழுது – யாமம் (இரவு)*

*ஒரு நாளை ஆறாகப் பிரிப்பது சிறுபொழுது ஆகும்.*

*காடு நாவலில் குறிஞ்சி முதற்பொருள்:*

*"இரவில் கடுமையான குளிர். என்னிடம் இரண்டு கம்பளிகள் இருந்தன." [காடு ப.20] என்று 'காடு' புதினத்தில் குளிர்காலம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,*

*"மழைக்காலம் முழுவீச்சுடன் ஆரம்பித்து விட்டது. மலைமழையின் உக்கிரம் பற்றி பலரும் பலவிதமாகக் கூறிக்கேட்டு செய்த கற்பனைகளை முழுக்க சிறியதாக அது மாற்றியது. மழை திரண்டு இருண்டு வருவது தரைப்பகுதியில் மிகமிக மெல்ல நடக்கும் விஷயம்" [காடு. ப 373] "மழை ஓய்ந்து ஒரே ஒரு நாள் இடைவெளி விட்டு மீண்டும் உடைந்து கொட்டத் தொடங்கியது" [காடு.ப 389] என்ற வரிகளில் மழைக்காலமும் அதனால் அடுத்து வரக்கூடிய குளிர்காலத்தையும் குறிப்பிடப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.*

*சிறுபொழுது : யாமம் (இரவு)*

*சிறுபொழுது என்பது ஒரு நாளின் பகுப்புகளாகும். ஒவ்வொரு நாளையும் ஆறு சிறுபிரிவுகளாக நம் முன்னோர்கள் வகுத்து வரையறை செய்துள்ளனர். தொல்காப்பியம் குறிபிடும் யாமம் என்னும் பொழுதினை நாட்டுப்புறங்களில் "ஜாமம்" என்று வழங்குகின்றனர். இது நள்ளிரவு இரவுப்பொழுதின் நடுப்பகுதியாகும். காடு நாவலில் "சந்தியா கால பூஜை முடிந்து ஜாம பூஜைக்கு காத்திருக்கும் நேரம் கோயிலில் அரட்டைக்கு எப்போதுமே பத்துபேர் இருப்பார்கள்." "சாம பூஜை ஏழு மணிக்கு அல்லது ஜமா நல்ல சுருதி சேர்ந்தால் எட்டு மணிக்கு அதன்பிறகு நாங்கள் படிக்கட்டில் இரவு இருப்போம்". [காடு. ப 83]*

*என்ற வரிகளில் ஜாமம், இரவு என்ற சிருபொழுதை பயன்படுத்தியிருக்கிறார் ஆசிரியர். இவ்வாறு யாமம், ஜாமம், ராவு, ராமுச்சுடும், இராத்திரி என்ற பெயரில் இரவுப்பொழுது வழங்கப்படுவதை காடு நாவலின் மூலம் அறியமுடிகிறது.*

*உரிப்பொருள்:*

*குறிஞ்சித்திணைக்கு உரிய உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் தொடர்பான ஒழுக்கமும். புணர்தல் என்பது கூடுதல், சேருதல் என்று பொருள்படும் அதாவது தலைனும் தலைவியும் பிறர் அறியாமல் கூடி மகிழ்தல், புணர்தல் என்பது கூடல் என்ற சொல்லாலும் குறிக்கப்படும்.*

*காடு நாவலில் குறிஞ்சி உரிப்பொருள் – புணர்தல்*

*குறிஞ்சி என்னும் மலைநிலம் வளமானது குளிரானது எனவே புணர்ச்சி உரிப்பொருளாகிறது.கிரிதரன் என்பவன் சிறுவயதிலிருந்தே தன் மாமன் மனைவியின் உறுப்புகளை வருணிக்கிறான். இதனால் காம உணர்வு வெளிப்படுகிறது. இரவில் படுத்துறங்கும் போதும் ஒரு பென்னுடன் சேர்ந்து படுப்பது போன்றும் புணர்வது போன்றும் கற்பனை செய்கிறான், அதன்படியே கனவும் காண்கிறான். இறுதியில் மனநோயின் விளிம்பையும் தொட்டு மீள்கிறான் என்ற அமைப்பில் ‘காடு’ புதினம் அமைந்துள்ளது. கட்டட வேலைக்குப் போன ரெஜினா, சினேகம்மா இருவரையும் குட்டப்பன் புணர்தலில் ஈடுபடுத்துகிறான்.*

*உணவிற்கும் வழியின்றி வறுமையில் கிரியின் வாழ்வு அமைகிறது. காட்டில் வேலை செய்யும் ஆபேல், ராபி, குரிசு, குட்டப்பன், ரெசாலம் ஆகியோருக்கு எந்த வசதி வாய்ப்பும் இல்லை. அவலவாழ்க்கைத்தான் கேளிக்கையும் காமமும் சிறு மகிழ்வாக காடு புதினத்தில் அமைகின்றது.*

*குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்கள்:*

*தெய்வம் - முருகன்;*
*மக்கள் - சிலம்பன்,வெற்பன், குறவன், குறத்தி*
*பறவை - மயில், கிளி*
*விலங்கு - புலி, கரடி, பன்றி, யானை*
*ஊர் – சிறுகுடி*
*நீர் - சுனை, அருவி*
*பூ - குறிஞ்சி, காந்தள், வேங்கை*
*மரம் - சந்தனம், அகில், தேக்கு, அசோகம்*
*உணவு - தினை, மலை நெல், கிழங்கு, பறை - வெறியாட்டுப் பறை*

*காடு நாவலில் குறிஞ்சி கருப்பொருள்:*

*பழங்குடி மலைவாழ் மக்களின் விருப்ப தெய்வங்கள்:*

*நிலம், நீர், காற்று, தீ ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களில் ஒன்றான நிலத்தில் குறிஞ்சத்திணையாகக் கருதப்படும். மலையும் மலைசார்ந்த பகுதியல் வாழும் குறிஞ்சிநில மக்களின் வாழ்வாதாரக் கடவுளாகவும் அசுரர்களை வதம் செய்தவராகவும் காலில் வீரக்கல்மலை அணிந்து குன்றில் விற்றிருப்பவராகவும் விளங்கும் முருகனை,*

*“செங்களம் படக்கென்று அவுணர்த் தேய்த்த*
*செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்*
*கழல்தொடி சேஎய் குன்றம்” (குறுந்தொகை 1)*

*என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது.குறிஞ்சி நிலத்தின் தெய்வம் முருகன் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. “முருகப்பெருமானுக்குரிய வேலினை ஏந்தி வழிபடுபவன் வேலன். அவன் தெய்வம் ஏறி முருகனாகவே நின்று ஆடுல் வெறியாட்டு ஆகும். வெறியாட்டுக் குறிஞ்சி நிலத்திற்குரியது. ‘காடு’ புதினத்தில் அந்தந்த பழங்குடி மலைவாழ் மக்களின் விருப்ப தெய்வங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*வள்ளிக்கிழங்கு:*

*குறிஞ்சி நில மக்கள் கவலைக்கிழங்கு எனப்படும் வள்ளிக் கிழங்கினை உணவாகப் பயன்படுத்தினர் என்பதை காடு நாவலில் அறியலாம். இதனை,*

*“………………… மா இருந்து*
*வயவுப்பிடி முழந்தாள் கடுப்ப குழிதொறும்*
*விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிகவலை (மலை 126-183) என்னும் பாடலடிகள் வாயிலாக உணரலாம்.*

*மிளா, கரடி, மான்:*

*“நீலி மலைப்பகுதிகளில் மிளாக்களை நாம் காண்பது அது முதல் தடவையல்ல (காடு ப.13) என்ற வரிகள் மூலமாக யானை, பெருநரி, மான், கரடி, மிளா, பன்றி போன்ற விலங்குகளை குறிப்பிடப்பட்டுள்ளது.*

*வேங்கை,தேக்கு:*

*"மெல்ல நடந்து அயனி மரத்தடிக்குச் சென்றதுமே எனக்கு வியர்வை அடங்கி காது மடல்களில் குளிர ஆரம்பித்து விட்டது. அப்பகுதியில் அயனி மரமல்லாமல் மிகப்பெரிய மரங்கள் ஏதுமில்லை.மஞ்சனாத்தி, கோங்கு, காட்டுநெல்லி, பூவரசு போன்ற மரங்கள்தான் (காடு ப்ச்.40)இவ்வரிகளில் வேங்கை, அரசமரம், தேக்கு, மூங்கில் போன்ற மரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*காட்டுக்கோழி, காகம்:*

*காகங்கள் அயனி மரத்தின் தாழ்ந்த கிளைகளில் உட்கார்ந்து கீழே நோக்கிக், கத்தின (காடு. ப40) என்பதிலும் "உண்டு" அது சாத்தன் பரவை. அது வலிய கரிமலையுடெ உச்சியில் உண்டு (காடு. ப278) எனும் இவ்வரிகளில் செம்பூத்து, காட்டுக்கோழி, சிட்டுக்குருவி, காகம், போன்ற பறவைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதை காடு நாவலில் அறிய முடிந்தது.*

*செறியாழ், தப்பை, பினாச்சி :*

*இல்லல்ல செறியாழ் தும்பி முளி எந்நும் பறயும். தும்பி போல மூளுந்நில்ல (காடு ப279) எனும் இவ்வரிகளில் தப்பை, பீனாச்சி, செறியாழ் போன்ற பெயர்கள் கூறப்பட்டுள்ளன என்பதை இந்நாவலில் அறிய முடிந்தது.*

*கொன்றைப் பூ*

*காற்றின் கொன்றைப் பூக்கள் உதிர்ந்தபோது நான் திடுக்கிட்டேன் (காடுப282) எனும்இவ்வரிகளில் கொன்றைப்பூ, குறிஞ்சிபூ போன்ற பூக்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை காடு நாவலில் அறிய முடிந்தது.*

*தொகுப்புரை:*

*திணை என்பது முதற்பொருளான நிலத்தையும் மக்களின் நடவடிக்கைகளையும் குறிக்கிறது. திணை இலக்கியம் என்பது நிலமும் பொழுதும் இயற்கையைப் பின்னணியாகக் கொண்டே மனித வாழ்வினைப் புனைவதாக அமைகிறது. இதனைத் திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலங்கள் பிரிக்கப்பட்டு அந்தந்த நிலத்தின் பொழுதும் ஒழுக்கமும் வரையறுக்கப்பட்டுள்ளன.*

*பார்வை நூல்கள்:*


*இளம் பூரணர்* — *தொல்காப்பியப்பொருளதிகாரம்*
*அகத்திணையியல் புறத்திணையில்*
*கழக வெளியீடு, அப்பர் அச்சகம்,*
*சென்னை 1953*

*ஜெயமோகன்* — *காடு (நாவல்)*
*25-எ,தரைத்தளம் முதல்பகுதி*
*ஸ்பென்சர் பிளாசா*
*769 அண்ணாசாலை,சென்னை-2*
*63,நாச்சியம்மைநகர்,சேலவாயல்*
*சென்னை-51*
*2016*

*ஸ்ரீகுமார்* — *தமிழில் திணைக்கோட்பாடு*
*பாவை அச்சகம்(பி லிட்)*
*16/142 ஜானி ஜான்கான்சாலை*
*இராயப்பேட்டை சென்னை,*
*எப்ரல் 2012*


********* ********* ********** ********* ********* ********** ********** **********